விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 15 ஷவ்வா 10 இதழ் 139
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-6-1985

## பூட்டான் பேச்சுக்களில் 'ரெலோ' பங்குகொள்ளாது

[சென்னை]

பூட்டான் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று தமிழீழ விடுதலை இயக்கம் சென்னையில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அதன் தலைவர் சிறி சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பூட்டான் மகாநாட்டில் பொதுவான உத்தி ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தீவிரவாதக் குழுக்களுடன் ஆலோசனை நடத்தவிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [ரா]

## எச். டபிள்யூ. ஜெயவர்த்தன தலைவர்

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள பூட்டான் செல்லவிருக்கும் ஜனாதிபதியின் விஷேட தூதுக்குழுவுக்கு எச். டபிள்யூ ஜெயவர்த்தன தலைமை வகிக்கவுள்ளார்.

இத்தூதுக்குழுவில் இடம் பெறும் சகல உறுப்பினர்களையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேரடியாக தெரிவு செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# பூட்டான் செல்வதற்குமுன் டில்லியில் கருத்துப் பரிமாறல்!

## இந்திய அதிகாரிகள் ஏற்பாடு

(புதுடில்லி)

இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக பூட்டானில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் இந்திய அதிகாரிகள், இலங்கை அரச அதிகாரிகளுடனும் தமிழ்த்தலைவர்கள் மற்றும் தமிழ் தீவிரவாதிகளுடனும் புதுடில்லியில் கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ளவுள்ளார்கள்.

இக்கருத்துப் பரிமாறல்களின் போது இலங்கை இனப் பிரச்னை தொடர்பான பல முக்கிய விடயங்கள் ஆராயப்படலாம் என நம்பப்படுகிறது. இந்தக் கருத்துப் பரிமாறல் பூட்டான் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியான ஓர் ஏற்பாடு எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை பூட்டானில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் தலைவர்கள், மற்றும் தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையின்போது இந்திய அதிகாரிகள் குழு ஒன்றும் அங்கே பிரசன்னமாயிருக்கும்.

இந்த இந்தியக்குழு பேச்சுவார்த்தைகளில் உத்தியோக பூர்வமாகக் கலந்து கொள்ளாதபோதும் பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பினருக்கு

[8-ம் பக்கம் பார்க்க]

## தீவிரவாதிகளுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் போர் நிறுத்தத்தின் பின்னர் வன்செயல்கள் இடம்பெற்றாலும் தமிழ் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்துவது என்ற தமது போக்கை இலங்கை அரசு மாற்றாது என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 11 கடைகளில் கொள்ளை: வவுனியாவில் சம்பவம்!

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 11 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வவுனியாவிலுள்ள இ. தொ. காங்கிரஸ் காரியாலயமும் உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இருசந்தேகநபர்களைப் பொலிசார் கைது செய்துள்ளதாகவும், கொள்ளையடிக்கப்பட்ட சிலபொருட்களை மீட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் பி. எஸ் அப்துல்லா இதுபற்றி வவுனியா பொலிசில் செய்துள்ள முறைப்பாட்டில் வவுனியாவில் அடிக்கடி இப்படி நடைபெறுவதாகவும் இதனைத்தவிர்க்க தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஊர்காவல் படைக்கு உத்தரவு

(கொழும்பு)

ஊர்காவல்படையினர் இனிமேல் சோதனைகளை செய்வதாயின் குறைந்தது இரண்டு பொலிசாருடனேயே செல்ல வேண்டும். அத்துடன் பொலிஸ் மேற்பார்வையின் கிழ்தான் இவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்த முடியும்.

இத்தகைய அவசர உத்தரவொன்றை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன பிறப்பித்துள்ளார்.

## யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் கொள்ளை!

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணப் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று அதிகாலை பல பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை 2 மணியளவில் சுமார் 6 பேர் கொண்ட கோஷ்டியொன்று லொறியொன்றில் இங்கு வந்து காவலாளியை துப்பாக்கிமுனையில் மிரட்டிக் கொள்ளையை மேற்கொண்டது

[8ம் பக்கம் பார்க்க]

## பத்திரிகையாளர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கடத்திச் செல்லப்பட்ட 'சிலோன் டெயிலி நியூஸ்' பத்திரிகையைச் சேர்ந்த திரு சிசில் விக்கிரமநாயக்கா நேற்றுமாலை விடுதலை செய்யப்பட்டார். நேற்று மாலையே அவர் கொழும்பு புறப்பட்டுச் சென்றார்.

## அதிபர் ஆனந்தராஜன் மக்கள் பணியில் முன்னின்றவர்

### யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஆனந்தராஜன் கல்வித்துறையில் மாத்திரமல்லாது மக்கள் பணியிலும் முன்னின்றவர் 1977-ம் ஆண்டு முதல் இப்பிரதேச மக்கள் பேரின்னல்களில் அழுந்திநின்ற நெருக்கடிகளின்போது மக்கள் துயர்துடைக்க இவர் துணிந்து முன்நின்றார்.

யாழ் பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்

(8ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் கான்ஸ்டபிள் காணவில்லை

[வவுனியா]

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஒட்டுசுட்டானில் வைத்து காணாமல் போனதாகக் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருபொலிஸ் கான்ஸ்டபிள்கள் இ. போ. ச பஸ்ஒன்றில் பிரயாணம்செய்து

(8-ம் பக்கம் பார்க்க)

## மறைந்த சென். ஜோன்ஸ் அதிபர் ஆனந்தராஜன் பூதவுடலுக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி!

[யாழ்ப்பாணம்]

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. செ. எ. ஆனந்தராஜனின் பூதவுடலுக்கு நேற்றுக் காலை முதல், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பலர் திரள்திரளாகச் சென்று அஞ்சலி செலுத்தினார்கள். கல்லூரி வளவில் உள்ள அவரது இல்லத்தின் நடு மண்டபத்தில் பேழையில் வைக்கப்பட்டிருந்த பூதவுடல் மலர் மாலைக் குவியலில் மறைந்திருந்தது.

(8ம் பக்கம் பார்க்க)



## 5 லட்சம சன்மானம்

(கொழும்பு)

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு செ. எ. ஆனந்தராஜாவின் மரணம் சம்பந்தமாக தகவல் தருவோருக்கு சன்மானமாக ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ரா)

## தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண: புரட்சிகர இடதுசாரி அரசால்தான் முடியும்

[கொழும்பு]

புரட்சிகர இடதுசாரி அரசு ஒன்றினால் தான் தமிழ் தேசியப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியும் என்று நவ சமசமாஜக்கட்சியின் புதிய மத்திய கமிட்டி கருத்து வெளியிட்டுள்ளது

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட மேற்படி கமிட்டி ஜே. ஆர். அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்கு இடதுசாரிகளும் தொழிலாளர் வர்க்கமும் ஒன்றுபட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியினவருடாந்த மாநாடு அண்மையில் வெற்றிகரமாக முடிவடைந்தது. பொதுவாக உலக புரட்சிகர நிலைமைகள் குறித்தும் குறிப்பாக காலனித்துவ நாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகர நிலைமைகள் பற்றி மாநாடு விரிவாக ஆராய்ந்தது.

## ஜுபிலி மண்டபத்தில் நாளை இறுதி அஞ்சலி!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். ஜோனஸ் கல்லூரி அதிபர் செ. எ. ஆனந்தராஜனின் இறுதிச்சடங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்

(8-ம் பக்கம் பார்க்க]

## ஆனந்தராஜன் கொலைக்கு 'புலிகள்' இயக்கம் உரிமை

[யாழ்ப்பாணம்]

யாழ் சென் ஜோன்ஸ் அதிபர் செ எ. ஆனந்தராஜனின் கொலைக்கு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் உரிமை கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி இயக்கம்விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், ''சர்வதேச ரீதியில் எம் இனம் முழுவதையுமே காட்டிக்கொடுத்த துரோகியும் சிறிலங்கா இனவெறி அரசின் தீவிர விசுவாசியும், இனவெறி இராணுவத்தின் நெருக்கமான நண்பனுமான ஆனந்தராஜன் கடந்த 26-ம் திகதி எம்மால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எம்விடுதலை இயக்க வரலாற்றில் நாம் தீர்க்மாக ஆராய்ந்த முடிவுகளையே

[8 ம்பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

செம்பு, பித்தளை, அலுமினிய கழிவுகள் உயர்விலைக்குப் பெறப்படும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4031

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு கிலோ ரூபா 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 4030

மணிகும்பானிறை ஆவரம் புலத்தில் 26 பரப்பு நெற்காணியும், அத்துடன் சோனகன் கட்டுவயலும், அத்தியடி வயலும் (46½ பரப்பு) விற்பனைக்குண்டு தொடர்பு: நி. குணசிங்கம், கற்பகம், டச்சு ரோட், சாவகச்சேரி. 4024

அளிப்பிட்டி இறை, மண்குளியில் பனைகளும், வடலிகளும. தென்னைகளும் உள்ள 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நி. குணசிங்கம், கற்பகம், டச்சு ரோட். சாவகச்சேரி 4025

சாவகச்சேரியில் பாடசாலை, வைத்தியசாலை, புகையிரத நிலையம், பிரதான வீதி கு அண்மையில் நல்ல சூழலில அமைந்துள்ளதும், சாவகச்சேரி இந்துக்கலலூரிக்கு அண்மையில் உள்ளதுமான வீடு கட்டத்தகுந்த 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு, மா, பலா ஆகிய பயன்தரு மரங்கள் நிறைய உண்டு. விபரங்கட்கு: வ சுப்பிரமணியம், மருதடி, சாவகச்சேரி, 4028

வீட்டுப் பாவனைச் சாமான்கள் மின் உபகரணங்கள் சிறுவர்களுக்கு ஆண்களுக்கு ஆடைகள், வீட்டை அலங்கரிக்கும் சமான்கள் வேறும் சில சாமான்களும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு சனி, ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம் விலாசம்: 1. செட்டித்தெரு ஒழுங்கை, கோவில் வீதி, நல்லூர். 4091

நல்லூர் செட்டித்தெருவில் 1 1/4 பரப்புக்காணி சிறு வீடு கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 31/4 செட்டித்தெரு, நல்லூர். 4103

9 ஸ்ரீ 2262 இலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இல 41, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம 4107

## தேவை

வொக்ஸ் வேகன் 1300 டொயட்டா K. V. 20, 25 பேஜோ 504, 404 தேவை தொடர்பு கொள்ளவும்: கிறிஸ்டல் பலெஸ், 158, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 4055

வில்வம்பழம் தேவை. தொடர்பு: மில்க்வைற் யாழ்ப்பாணம். 4057

## வாடகைக்கு

யாழ். நகர் எல்லைக்குள். பாடசாலை வகுப்புகள் நடத்தக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடுஉடன் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும்; விளம்பர இல. 4097 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 4097

## பயிற்சி

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு 1985-07-01 திங்கட்கிழமை காலை 8-30 தொடக்கம் திரு. W. N. தேவகடாட்சம், அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி (கனிஷ்ட பிரிவு) வட்டுக்கோட்டை அவர்களால் காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடாத்தப்படும். ஆர்வம் உள்ளவாகள் பங்குபற்றலாம். 4092

## மணப்பந்தல்

கல்வி, உயர்குலம், வீட்டுடன் சீதன வசதி ஒருங்கமைந்த 3' வயது பெண்ணுக்கு தகுதியுடைய, உத்தியோகம் வகிக்கும், நற்பழக்கங்களுடைய மணமகன் தேவை. தொடர்பு: 43 நெல்லியடி வீதி, கோணமலை, கொக்குவில். 4096

யாழ்ப்பாண இந்து மத, வேளாளகுலப் பெண்ணிற்கு (வயது 35, உயரம் 5'—5'') ஏற்ற மணமகன் தேவை. அரச சேவை, கூட்டுஸ்த்தாபன சேவை அல்லது வேறு கண்ணியமான தொழில்புரிவோர் விரும்பத்தக்கது. சீதனம் - வீடு, பணம், நகை கொடுக்கப்படும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 4087, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4087

### வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசம்

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

(அ) கல்வித் தகைமைகள்:-

கூட்டுறவுப் பயிற்சியுடன் மூன்று வருடகால அனுபவமுடைய பட்டதாரி அல்லது 50 இலட்சம் ரூபாவினை மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபார ஸ்தாபனமொன்றில் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருடகால அனுபவம் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமாவுடன் 3 வருடகால அனுபவம்.

(ஆ) சம்பளத்திட்டம்:- 500 — 840 / 20/5 — 30/8

(இ) வயது எல்லை: 35 — 40

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம் தலைவர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், 330, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 5-7-85ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
(4102)

## தவறிவிட்டது

26-06-1985 அன்று பி. ப. 3 மணிக்குட்பட்ட நேரத்தில் யாழ். மானிப்பாய் வீதிக்குட்பட்ட பகுதியில் என்னுடைய நீல நிற பிளாஸ்டிக் கவருடன் கிழைக்கிய தஸ்தாவேஜுகளும் ஓர் அப்பியாச கொப்பியுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். சிற்றி மெடிகலில் அல்லது மானிப்பாய் நியூபாமசியில் ஒப்படைக்கவும். எம். ஏ. வாசுதேவன் (மருத்துவ பிரதிநிதி), வணிகா மெடிகல்ஸ், 50/45, ஆஸ்பத்திரி வீதி, யாழ் நகர். 4084

எனது தேசிய அடையாள அட்டை இல; 342100210V இரண்டாம் குறுக்குத் தெரு/ பஸ் நிலையத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: L. C. செல்வரட்ணம், சிற்றி மெடிக்கல், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4109

## காணவில்லை

எனது ஒரு வயது அல்சேஷன் நாய்க்குட்டியை 26-6-85 இரவு முதல் காணவில்லை. கறுப்பு நிறம். பெயர் லக்கி. கண்டவர்கள் தயவு செய்து தகவல் தரவும். முருகையாப்பிள்ளை, 89, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 4099

## கண்டெடுக்கப்பட்டது

யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கிளைக்கருகில் பெறுமதிவாய்ந்த பொருள் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளவும். இ. செல்லத்துரை, உத்தரவுபெற்ற நில அளவையாளர், நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 4078

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

புங்குடுதீவு 5ம் வட்டாரம் புளியடி சந்தியைச் சேர்ந்தசண்முகம்தியாகராஜா என்பவரது மரண சாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

—காலஞ் சென்றவர்

வழ. இல. ரி/3880

சண்முகம் தியாகராஜா கைம்பெண் கனகாம்பிகை இல. 193/5, சபாஸ் ஒழுங்கை, அரசடி வீதி, யாழ்ப்பாணம்

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றிஅவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1985ம் ஆண்டு பங்குனி மாதம் 8ந் திகதி

மன்றின் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்
அ. உமாசங்கர்,
மனுதாரின் சட்டத்தரணி.
4077

## இடமாற்றம்

எமது ஸ்தாபனமாகிய ஏ பவர் அன் கொம்பனி இல. 5, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணத்திலிருந்து இல. 51, அம்மன்வீதி, யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி இல. 24318. இதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

மனேஜர்
4044 ஏ பவர் அன் கொம்பனி

## 1வது பிறந்ததினவாழ்த்து

### ஹபிள் ருஜ்



மகேஸ்வரன் தம்பதிகளின் மூத்த புதல்வன் தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். அவரது அப்பா, அம்மா, ஜேர்மனியில் இருக்கும் மாமா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சின்னம்மா, அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார் ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

531/2, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 4041


## 1வது ஆண்டு நினைவஞ்சலி

29- 6- 84

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம்

### வைத்திலிங்கம் பாலசிங்கம்

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்



மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.
(4047)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

1985-06-30 ஞாயிற்றுக்கிழமை



### தருமசோதி அமிர்தலிங்கம்

(கல்வித் திணைக்களம், அநுராதபுரம்)

ஆண்டவன் படைப்பு 1956-02-09 | ஆழ்பவர் அழிப்பு 1985-05-17

உயிரினும் இனிய தருமசோதி
அநுராத புரத்தில் அவலத்திடையே
சிப்பாயிடம் ''காப்பாய்'' என்ற புருவாய்
காப்பகம் சென்றாய் காடையர்க்கஞ்சி
வேலியே பயிரை மேய்வதுபோல
வீரமில் ஈன் விலங்காய்ச் சுட்டான்
துடி துடித்து மாண்டாய்
துயருடன் வாழ்கிறோம்
என்றுவருவாய் எம்துயர் தீர்க்க;

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
(4089)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## அமெரிக்க விமான பணயநாடகம்

# விரைவில் முடிவடையும்!

### நபி பெரி நம்பிக்கை!!

பெய்ரூட், ஜூன் 28

கடந்த இருவாரகாலமாக இடம்பெற்றுவரும் அமெரிக்க விமானப் பயணிகள் பணய நாடகம் விரைவில் முடிவடையும் என்று ஷியா அமல் முஸ்லிம்இயக்கத் தலைவரான நபிபெரிநம்பிக்கைதெரிவித்துள்ளார்

அமெரிக்க விமானப் பயணிகளை விடுவிப்பது குறித்து பிரெஞ்சு சுவிஸ் ஆஸ்திரிய ராஜதந்திரிகளுடன் நபிபெரி பேச்சு நடத்தினர். இதனைத் தொடர்ந்து ரி.வி ஒன்றுக்குப் பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

நபிபெரி மேலும் தெரிவித்ததாவது: அமெரிக்க ''விமானப் பயணிகள் பணய நாடகம் விரைவில்முடிவடையும் என்று நம்புகிறேன்.

இதற்கு ஒத்துழைக்கும்வகையில் இஸ்ரேலிலுள்ள சகல ஷியாட் அமல் இயக்கத்தினரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பணய நாடகம் முடிவடையும்வரை பெய்ரூட்டிலுள்ள மேற்கத்திய தூதரகமொன்றில் அமெரிக்க விமானப் பயணிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பார்கள்'' என்றும் நபிபெரி உறுதியளித்தார்.

இதேவேளை இப் பயணிகளை நிபந்தனைகளெதுவுமின்றி விடுதலைசெய்யவும் என்று அமெரிக்கா தொடர்ந்து லெபனன் நீதியமைச்சரும் ஷியாட் அமல் இயக்கத் தலைவருமான நபிபெரியைக் கேட்டுவருகின்றது. (கி)

## ஏகாதிபத்தியப்போக்கு——

# சோவியத் போலந்து தலைவர்கள் கண்டனம்!

வார்ஸோ, ஜூன், 28

''ஏகாதிபத்திய மேற்கு நாடுகள் யுத்த அபாயத்தை அதிகரித்து வருகின்றன'' என்று சோவியத் பிரதமர் ரிக்கேனேய், போலந்து தலைவர் ஜெனரல் ஜெருசெல்ஸ்கி ஆகியோர் கவலை தெரிவித்துள்ளனர்:

அவர்களிருவரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

உலகநாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு ஆயுத உற்பத்திக்கு மேற்குநாடுகள் ஊக்கமளிக்கின்றன. மனித முன்னேற்றம், கைத்தொழில் வளர்ச்சியை எதிர்த்து, தொழில்நுட்பப் பெருக்கத்தின் மூலம் யுத்த அபாயத்தை அவை உருவாக்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# இந்திய போயிங் மூழ்கிய இடத்தில் ஒலி சமிக்ஞை!

### பயணிகளின் உறவினர்கள் லண்டன் பயணம்!!

லண்டன் ஜூலை 28,

அயர்லாந்தின் கார்க் கரையோரப்பகுதிக்கு அப்பால் அத்திலாந்திக்கில் 'இந்திய போயிங்' மூழ்கிய இடத்தில் இருந்து ஒலி சமிக்ஞைகள் கேட்டவண்ணமுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒலி சமிக்ஞைகறுப்புப் பெட்டியிலிருந்து வரும் ஓசையென்றும். இது விட்டுவிட்டுக் கேட்டவண்ணமுள்ளதெனவும் பிரிட்டனின் கடற்படைக் கப்பலான 'எச் எம். எஸ். சலஞ்சர்' அறிவித்துள்ளது.

விபத்துக்குள்ளான அவ் விமானத்தின் கறுப்புப்பெட்டி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த ஒலி சமிக்ஞை விரைவில் அதைக் கண்டு பிடிக்க உதவலாமென்று கூறப்பட்டது

கனடாவும் சிறிய நீர்மூழ்கிக் கப்பலொன்றை இந்தக் கறுப்புப்பெட்டியைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு அனுப்பிவைத்துள்ளது. அத்துடன் 'கோட்லன்ட் லொக் கேற்றர்' என்ற வேறொரு கப்பலும் இதனைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளது.

ஸ்பெயினில் இந்திய போயிங் கடலில் மூழ்கிய பகுதியில் இருவிமானக் காப்டன்கள் அவ் விமானம் மூழ்க முன்னர் நடத்திய உரையாடலின் ஒருபகுதி பதிவுசெய்யப் பட்டுள்ளதாகவும் இப் பதிவினை ஸ்பெயின் வானொலி நிலையம் கனடாவிடம் தற்போது கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விபத்துக்குள்ளான இந்த போயிங்கில் பயணம்செய்தவர்களின் உறவினர்களில் 21 பேர் நேற்றுக் காலை பிரிட்டன் பயணமானார்கள்.

இவர்கள் அவ் விமானத்தில் சென்ற தமது உறவினர்களை அடையாளம் காணும் வகையில் அவர்களின் மருத்துவக் குறிப்புக்கள் மற்றும் அவர்கள் பற்றி அறிவதற்கான ஏனைய அறிக்கைகளுடன் பயணமாகின்றனர். (கி)

## சுகாதாரநிலைய திறப்புவிழா

[மானிப்பாய்]

இணுவில் மக்கள் சுகாதாரக் குழுவின் ஆதரவில் உருவாக்கபபட்ட ஆரம்ப சுகாதார நிலையத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது

இணுவில் பரமானந்த நூல்நிலையத்தில் அமைந்துள்ள இந்த சுகாதார நிலையத்தை வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் திறந்துவைப்பார்.

இது தொடர்பாக இணுவில் அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் திரு சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெறவிருக்கும் வைபவத்தில் வைத்திய கலாநிதி என். விவேகானந்தன் திரு. வ. கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவிருக்கின்றார்கள். சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராஜா. உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

## முதல் சுற்றில் விஜய், ரமேஷ் வெற்றி!

விம்பிள்டன், ஜூன், 28

விம்பிள்டன் உலக டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்களான விஜய் அமிர்தராஜ், ரமேஷ் கிருஷ்ணன் ஆகியோர் முதல்சுற்றில் வெற்றிபெற்றுள்ளனர்.

அமிர்தராஜ் ஜொனதன்கன்ரர் என்பவரை 6—3, 6—4, 6—4 என்ற செட்களில் தோற்கடித்தார்.

ரமேஷ் கிருஷ்ணன் நியூஸிலாந்து வீரரான குருஸ் டேர்வினை 6—2, 7—5, 4—6, 7—6 என்ற செட்களில் தோற்கடித்தார். (கி)

# விமானப் பயணிகளுக்கு கூடுதல் பாதுகாப்புத்தேவை!

## அமெரிக்க போக்குவரத்து அமைச்சர்

வாஷிங்டன், ஜூன், 28

''உலக நாடுகள் விமானப் பயணங்கள் பாதுகாப்பானவை என்ற நம்பிக்கையை உலக விமானப் பயணிகள் மத்தியில் தீவிரமாக ஏற்படுத்தவேண்டும்'' என்று அமெரிக்க போக்குவரத்து அமைச்சர் எலிஸபெத் ரெயிலர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஸ்தாபனத்தின் கூட்டமொன்றில் உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த அமைப்பில் 33 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

''அண்மைக் காலங்களில் உலக விமானப் பயணங்கள் பாதுகாப்பின்றியுள்ளன அமெரிக்க விமானக் கடத்தல். இந்திய போயிங் விமான விபத்து என்பன இதற்கு நல்ல உதாரணங்களாகும். இதனால் விமானப் பயணங்களைமேற்கொள்ள மக்கள் அஞ்சுகின்றனர். இந்த அச்சத்தை நீக்கி இப்பயணங்களை மேலும் பாதுகாப்பானவையாக மாற்றவேண்டும்.

அமெரிக்கா எதிர்காலத்தில் விமானப் பாதுகாப்புக்களைப் பலப்படுத்தும் ஒவ்வொரு விமானத்திலும் ஒரு பாதுகாப் பதிகாரி நிறுத்தப்படுவார். 24 மணிநேரம் பொதிகள்தீவிர சோதனையிடப்பட்ட பின்னரே அவை விமானத்தினுள் ஏற்றப்படும்'' என்றார். (கி)

# இயக்கங்களின் கவனத்திற்கு ஒரு துண்டுப்பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

''இறைமையை மீட்பதற்காகப் போராடிவரும் புனிதமான இயக்கங்களுக்கு'' என்ற தலைப்பில் 'தமிழீழ மக்கள்குழு' துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

இக்கால கட்டத்தில் போய் பேச்சுவார்த்தை என்றால் என்ன நடக்கும் செரியுமா? இதையொரு தந்திரோபாயமாகத்தான் பாவிக்கப்போகிறார்கள். இதனால் எமக்குத்தான் ஆபத்துஎன்று தெரிவிக்கப்பட்டுள்ள அப் பிரசுரத்தில் மேலும் கூறபபட்டிருப்பதாவது:-

''இறைமைக்காகப் போராடிய ஆயிரக்கணக்கான இளைஞர்களையும், அப்பாவி மக்களையும் பறிகொடுத்தோம்; பல மக்களின் உடமைகளை இழந்தோம் இருபத்தையாயிரம் இளைஞர்களுக்குமேல் தங்கள் வேலை, கல்விப் படிப்பு, வாழ்க்கை என்பவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கெதி என்ன? இனியும் எமக்கு பேச்சுவார்த்தையா? வட்ட மேசை மாநாட்டில் என்ன முடிவு? எம்மைப் பூண்டோடு அழிக்கத்தான் இந்தப் பேச்சுவார்த்தையே ஒழிய நன்மைக்கல்ல.

''கூட்டணி மக்கள் மத்தியிலிருந்து எப்படித் தூக்கி எறியப்பட்டதோ அதநிலைக்கு நீங்களும் தள்ளப்பட வேண்டாம். பட்டாளங்களையும், காவடையர்களையும், அரசையும் பயமுறச்செய்த நீங்கள் மக்கள் மத்தியில் வேரூன்ற வேண்டும் என்பதை மறக்க வேண்டாம். மக்கள் மத்தியில் மதிப்போடும், ஆதரவோடும் நிலைகொண்ட இயக்கங்களே பேச்சுவார்த்தை வேண்டாம்' என்றும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருத்தணிகை மகா கும்பாபிஷேகம்

(சென்னை)

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான இத் தலத்தில் கடந்த 15 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக இக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

பலாயிரக்கணக்கான பக்தர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டனர். மயிலை மாமுனிவர் குருஜி சுந்தராம் சுவாமிகள் இக் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். திருமுருக கிருபானந்த வாரியார், மத்திய மகளிர் சமூகநலத்துறை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர், தொழில் அமைச்சர் ராஜாராம், சட்ட மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞானம் ஆகியோரும் இக்கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். (கி)

# பூட்டான் பேச்சுக்கள்

## இரகசியமாக நடக்கும்

(கொழும்பு)

பூட்டானில் இடம்பெறவிருக்கும் இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தீவிரவாத இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தைகள் மிகவும் இரகசியமாகவே நடைபெறும் என்று பூட்டானிலிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

பூட்டான் அரச உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். பேச்சுவார்த்தைகளின்போது பத்திரிகையாளர் எவருமே அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

## இயக்கிக் காண்பிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபையின் தீயணைக்கும் படை இயந்திரத்தின் சேவைபற்றிப் பாடசாலை மாணவர்களுக்கும், யாழ் நகர மக்களுக்கும் பரீட்சார்த்தமாக இயக்கிக் காண்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அடுத்த வாரம் முதல் தீயணைக்கும் படைக்கு நிதியுதவி வழங்கிய பாடசாலைகளுக்குத் தீயணைக்கும் படையின் சேவை பற்றி விளக்கிக் காண்பிக்கப் படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நூல் வெளியீடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்ட ஈழநாடு வாசகர் வட்ட செயலாளரும் பிரபல எழுத்தாளருமான கோப்பாய் சிவத்தின இரண்டு வெளியீடுகள் எதிர்வரும் 3-ம் திகதி புதன்கிழமை மாலை கிளிநொச்சியில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவிற்கு மேற்படி சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. வி கே திருலோகமூர்த்தி தலைமை தாங்கவிருக்கிறார்.

ஆக்கவுரிமைகள் வியாபாரக்குறிகள் பதிவகத்தினர் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றுப் பரிசு பெற்றமையைக் கௌரவிக்கும் முகமாகவும் இவரது எழுத்தாற்றலை ஊக்குவிக்குமுகமாகவும் இந்த வெளியீட்டுவிழா நடைபெறுகிறது.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவில் கோப்பாய் சிவத்தின் 5000 ரூபா பரிசு பெற்ற 'நியாயமானபோராட்டங்கள்' சிறுகதைத் தொகுப்பும் [பத்திரிகையாளர் வாசகர் நலன்புரிச் சங்க வெளியீடு] இலங்கை தமிழ் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் ஆக்கமும்என்ற நூலும் இவ் வெளியீட்டில் இடம்பெறுகிறது.

## குருபூர்ணிமா தினம்

(வண்ணார்பண்ணை)

மானிப்பாய் ஸ்ரீ சத்யசாயி சேவா மண்டலியின் குரு பூர்ணிமா தினம் 2ஆம் திகதி செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

## இலவசப் பயிற்சி

(வண்ணார்பண்ணை)

பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி ஒன்றினை இலவசமாக வழங்குவதற்கு காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

இச்சபையின் கல்விஊக்குவிப்புத்திட்டத்தின் கீழ் இப் பயிற்சியை நடாத்த சபை முடிவுசெய்துள்ளது. எதிர்வரும் 1ம் திகதி முதல் இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறவிருப்பதாக இதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

### மணி வாக்கு

நல்லன புரிந்திடல் நவின்றிடலின்பம்
அல்லன வஞ்சி யகற்றிடலின்பம்
புல்லியோர் பிழையெலாம் பொறுத்திடலின்பம்
தொல்லைகளல்லல்கள் தாங்கிடலின்பமே.
— சிவயோகசுவாமிகள்

## நமது நோக்கு

# அதிபர் ஆனந்தராஜனின் அகால மறைவு

பேராசிரியர் ஒருவரின் மரணச்சடங்குக்கு விடுமுறை கேட்ட மாணவருக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது உபவேந்தர் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் என்ன சொன்னாரென்பது பலருக்கு அதிசயமாகவும் ஆத்திரமாகவும் இருக்கும்.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாட்டு வளப்பம் புரியுமா? என்ற கிண்டலும் அன்று வழங்கப்பட்டது.

"எனக்கு சடுதியான மரணம் ஏற்படும் பட்சத்தில் பல்கலைக்கழகம் எவ்வித பாதிப்புமின்றி ஒழுங்குடனும் கண்டிப்புடனும் தொடர்ந்து நடைபெற நான் முன்கூட்டியே ஒழுங்கு செய்திருக்கின்றேன்" என்றார் சேர் ஐவர் ஜென்னிங்ஸ்.

ஆச்சரியமடைந்த மாணவர்களுக்கு திறப்புக்கோவைகள் சில யாரிடம் என்ன முறையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதை உதாரணமாக விளக்கி, யாருக்கு என்ன நடந்தாலும் இத்தக் கலைக்கோயில் தளப்பமின்றித் தொடர வேண்டுமென்பது அவருடைய விருப்பம்.

ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் முன்உரிமை வழங்கி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் மரபு தவறாது வழிவந்த பிறின்சிப்பல் ஆனந்தராஜன், சேர் ஐவர் ஜெனிங்ஸ் கருத்தை நிச்சயம் ஏற்றுக் கொள்ளும் கண்டிப்பாளர்.

பத்து வருடம் அதிபராக கல்லூரியின் புகழைப் பேணி முன்னெடுக்கும் நடுப் பயணத்தில், எதிர்பாராத வகையில் கொல்லப்பட்ட செய்தி சமூகத்தை நடுங்க வைத்திருக்கிறது.

யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டது இச்சம்பவத்தின் தாற்பரியத்தை துலக்குகிறது.

அரசியல் வாதிகள் பலர் இந்திராபோன்ற உலக அரசு தலைவர்கள்கூட சுடப்படுவது அதிர்ச்சியான செய்தியானாலும் அதற்கு காரணம் அரசியல் மோதலே.

மாணவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பில் தம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர். ஆசிரிய சமூகத்துக்கு எடுத்துக்காட்டான தலைமை ஆசிரியர் இவ்வாறு வழியில், தெருவில் சுட்டுக் கொல்லப்படுவது நாம் கண்டோ கேட்டோ அறியாத செய்தி.

கொடுமைகள் மலிந்த காலத்தில், இடத்தில் நாம் வாழ்கின்றோம். இருப்பினும் எதனையும் ஆழ்ந்து சிந்திக்காது நுனிப்புல் மேயும் பல மானிடர்கள் யாழ்ப்பாணத்தில் குதூகலம் நிலவுகின்றது. றெயில், மெயில் றெயில் கூட ஓடத்தொடங்கிவிட்டதென்ற போலிப் பிரசாரத்துக்கு தூபமிடுகின்றனர்.

அதிபர் ஆனந்தராஜனின் அகாலமரணம் இது பொய்யெனப் பறை சாற்றுகின்றது.

எதிர்பாராத துன்பநாடகம் இதுவென்றாலும் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமையை வெள்ளையடித்து அரசியல் லாபம் தேடும் பணியில் பத்திரிகைகளும் சமூகவிரோத சக்திகளும் இரவும் பகலும் தொழிற்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு ஏற்பட்ட பேரழிவு இன்று கூறப்படும் போர் நிறுத்தத்தால் ஈடுகண்டுவிடுமா?

இதற்கொரு ஆப்பு வைத்தாற்போல் வரலாறு காணாத இச்சோகச் சம்பவம் படிப்பினையாக வந்துள்ளது.

இன்னும் பத்து வருடங்கள் திறம்படச் சேவையாற்றும் ஆளுமையும் அனுபவமும் நிறைந்த அதிபரின் மறைவு அவருடைய கல்லூரிக்கும் சமூகத்துக்கும் மட்டுமல்ல, கல்வியில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் ஈடுகொடுக்க முடியாத பேரிழப்பு.

விசாரணையில் தானும் உண்மைவெளிவருமா என்ற நம்பிக்கையீனம் உண்டெனினும், இன்றைய பயங்கர சூழ்நிலையில் நிர்வாகம் எத்துறையாயினும் சரி, மிக வில்லங்கமான விடயமென்பது நிச்சயம் வற்புறுத்தப்படும்.

கல்லூரி அதிபர் என்றால் இளைஞரின் தலைவன். அவ்வித தலைமைத்துவம் எவ்வாறிருந்ததென்பதை மறைந்த அதிபருக்கு மாணவ சமுதாயம் செலுத்திய அஞ்சலி தக்க சான்றாகும்.

பாடசாலை முதல்வர் சமூகத் தொண்டராகத் திகழ வேண்டுமென்ற கோட்பாட்டை மறைந்த முதல்வர் ஆனந்தராஜன் நன்றாக நிறைவேற்றிவந்தவர்.

எவ்விதத்திலும் சாதாரணம் என்று கொள்ளமுடியாத இந்த அசம்பாவிதத்தை இனிமேலாவது தடுக்கும் பொறுப்பு எங்கள் சமூகத்தையே சார்ந்திருக்கிறது.

---

## பொது நலனில்
# இளைஞர்களைஈடுபடச்செய்வதே இளைஞர் ஆண்டின் நோக்கம்

[மானிப்பாய்]

"பொதுநலனில் இளைஞர்களை ஈடுபடச் செய்வதும் இதன்மூலம் அவர்களும், நாடும் நல்ல பயனடைந்து உயர்வு பெறுவதுமே இளைஞர் ஆண்டு பரந்த அடிப்படையில் இப்போது கொண்டாடப்பட்டு வருவதன் நோக்கமாக இருக்கிறது".

இவ்வாறு யாழ் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் திரு செ சோதிப்பெருமாள், யாழ் இணுவில் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் ஆண்டுக் கொண்டாட்டம் சம்பந்தமான செயல் திட்டக் கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் எடுத்துக் கூறினார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் தலைமையில் மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் சர்வதேச இளைஞர் ஆண்டுக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இளைஞர் ஆண்டு சம்பந்தமாகப் பாடசாலைமட்டத்திலே நடைபெற்றுவரும் செயல்திட்டங்களையும் நிகழ்ச்சிகளில் சிலவற்றையுமாவது வட்டார மட்டத்தில் நடத்தப்படவேண்டும்.

அடுத்த தவணையில் சகல வகுப்புகளுக்கும் மாணவர்கள் கற்கின்ற பாடங்களுக்கேற்பக் கல்விக் கண்காட்சியையும் மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்ச்சிகளையும் நடத்தவேண்டும் என்பதும் இந்த சர்வதேச இளைஞர் ஆண்டின் செயல்திட்டத்தின் குறிக்கோள் எனவும் அவர் எடுத்துக் கூறினார்.

கலை கலாச்சாரக் கண்காட்சிகளை அடுத்த தவணையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச தனஞ்செயன் தலைமையில் பின்வருவோர் அடங்கிய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

உபதலைவர்கள்: திருமதி பி சச்சிதானந்தம், திரு. எஸ். வி மகேசவேலு, செயலாளர்: திரு சு. நடராஜா, உறுப்பினர்கள்: திருவாளர்கள் இ. யோகேஸ்வரன், க. முருகுப்பிள்ளை, ச தியாகராஜா, த. சண்முகலிங்கம், மு. பரராஜசிங்கம், க. கணேசலிங்கம், திருமதிகள் ஜே. கிருஷ்ணசாமி பி. கஜேந்திரன்.

---

# அனுதாபத் தீர்மானம் வேண்டாம்
## பீலிக்ஸின் கடைசி உயில்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தமக்கு அனுதாபப் பிரேரணை எதுவும் நிறைவேற்றப்பட வேண்டாம் என முன்னாள் அமைச்சரும் தொம்பேதொகுதி முன்னாள் உறுப்பினருமான திரு பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா தமது கடைசி உயிலில் எழுதிவைத்திருக்கிறாராம்.

காலமாகு முன்னாள் உறுப்பினர்களுக்கு அனுதாபம் தெரிவித்துப் பிரேரணை கொண்டுவருவது பாராளுமன்றமரபு. இந்த மரபுப்படி தமது மரணத்தின் பின் தமக்கு அனுதாபத் தீர்மானம் எதும் நிறைவேற்ற வேண்டாம் என அவர் தமது உயிலில் தெரிவித்துள்ளார்.

திரு பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

---

# யாராக இருந்தாலும் உரிமை கோருக!

[யாழ்ப்பாணம்]

திரு. ஆனந்தராஜனின் மரண தண்டனையுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக உரிமை கோரவேண்டுமென தமிழீழ மாணவர் பேரவை [தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்] துண்டுப்பிரசுர மூலம் கேட்டுள்ளது.

"உண்மையை உணர்த்துங்கள்" என்ற தலைப்பில் வெளியான அத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன் உரிமை கோரப்படாத நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சென்ற வாரம் இவர் தலைமையில் பரியோவான கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் சிலர் சிறிலங்கா படைகளுடன் விளையாட்டு நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றியது யாவரும் அறிந்ததே. இந் நிகழ்ச்சியைத் திரு ஆனந்தராஜனே ஒழுங்கு செய்திருந்தார்.

இது விடயமாகப் பரியோவான் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர்கள் சிலரை தமிழீழ மாணவர் பேரவை [தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்] இம் மாதம் 23, 24-ம் திகதிகளில் நேரில் சந்தித்து தனது அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்ததுடன் தமிழீழ மாணவ சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்கும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தற்கும் திரு ஆனந்தராஜனின் ஆக்கபூர்வ

(8ம் பக்கம் பார்க்க)

---

# கல்வளை விநாயகர் ஆலய மகிமையும் புதிய சித்திரத் தேரும்

சண்டிலிப்பாயிலே கல்வளையிலே எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகரின் வருடாந்த உற்சவம் 22-6-85 சனிக்கிழமை கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து மகோற்சவம் நடைபெறுகின்றது. இவ்வருடம் விநாயகப் பெருமானுக்கு சபாபதி பொன்னம்பலம் கணக்காளர், நைஜீரியா) அவர்களால் உபயமளிக்கப்பெற்றதும், திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய உரிமையாளராகிய ஸ்தபதி, சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியாரும் அவரது குழுவினராலும் உருவாக்கப்பெற்ற புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் (30-6-85) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. 1-ம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 2-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் ஆறுமைல் தொலைவில் சண்டிலிப்பாய் என்னும் கிராமம் இருக்கிறது. கிராமத்தின் மத்தியிலே அமைந்துள்ள கல்வளைப் பதியிலே வண்டுவோர்க்கு வேண்டுவன அருளும் தேவலோகத்து கற்பக விருட்சம் போன்று மனம் உருகித் தொழுகின்ற அடியார்க்கு அருள்புரியும் வண்ணம் கோயில் கொண்டருளி இருப்பவர் கற்பக விநாயகர் ஆவர். வரகவியாம் சின்னத்தம்பி புலவரால் பாடல்பெற்ற புண்ணியதலம் கல்வளைப் பதியாம்.

ஒல்லாந்தர் இந்நாட்டை ஆண்டகாலத்திலே வாழ்ந்த பெரியார் வில்லவராய முதலியாரின் புத்திரராகிய சின்னத்தம்பி புலவர் இயற்றருளிய நூல்கள் நான்கு. அவை மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவைவேலன்கோவை, பறாளை விநாயகர்பள்ளு ஆகும். இவற்றிலே இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட கல்வளை அந்தாதி இந்த ஆலயத்து விநாயகர் பேரில் பாடப்பட்டிருக்கிறது. இந்த நூலில் ஆலயத்து மகிமையும், சுற்றாடலின் பெருமையையும் அழகுற எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆளுமையின் கீழிருந்த சண்டிலிப்பாயில் அமைந்திருந்த கல்வளை விநாயகர் பேரில் மிகுந்த பக்தியுடையவராகி கல்வளை விநாயகர் திருவூஞ்சல் என்னும் திருவூஞ்சற் பாடல்களைப் பாடி நிலைபெறச் செய்தார் கல்வளை அந்தாதிக்கு காலத்தால் முற்பட்டது இந்தத் திருவூஞ்சல் என்பதை அறியமுடிகிறது.

சுவாமிநாதன் தர்ப சிலன்
(செயலாளர்.
தர்மகர்த்தா சபை)

---

# வருடாந்த பொங்கல்

(மண்டைதீவு)

மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இப்பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் அம்பாள் ஊர்சுற்றுலா வழமைபோல வெள்ளிக்கிழமை மாலை (28-6-85) நடைபெற்றது. இந்த ஊர் சுற்றுலாவிலும், முத்தரிசித்தண்டலிலும் பக்தர்கள் அதிகமாக கலந்து கொண்டனர். திங்கட்கிழமை வழமைபோல் தீயிறங்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

---

# நயினையுறைந்தவள் தேரேறி வருகிறாள்

எழில் பொங்கும் ஈழவள நாட்டின் அருள்மிகு சக்தியென
தொழில் கொள்ளும் மானிடர்கள் தொழுதேற்றும்
[தேவியென

முகில் வண்ணன் முறைகாண முத்துமாரித் தெய்வமென
பொழில் நிறைந்த நயினையிலே எழில்க் கோவில்
[கொண்டவளே

அலை போல அருள் பொங்கும் சிலையாக அமர்ந்தவளே
கலை வளர கவிசிந்தும் கருணை யொலி நிறைந்தவளே
மலை போல வரமெல்லாம் மானிடர்க் கருள்பவளே
நிலை யாத வாழ்வினிலும் நிம்மதிகள் தருபவளே.

எம். பி. அருளானந்தம்,
காரைநகர்.

# இன்றைய பலன்

மாதம்; ஆனி
திகதி: 15 (1985-6-29)
கிழமை: சனி
திதி: துவாதசி முன்இரவு வரை
நட்சத்திரம்: விசாகம் பிற்பகல்வரை

மேடம்: பகை மூட்டம் தோன்றும். பதட்டம் உடன் சேரும். மிகையான போக்கினால் மனது பாழாய்ப் போகும்.

இடபம்: குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும். களஸ்திரவழியால் இலாபமும் கிடைக்கும்.

மிதுனம்: எண்ணியதில் தடைகள் தோன்றும் நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

கடகம்: நல்லதைச் செய்வீர்கள். பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பும் உயரும்.

சிங்கம்: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினம். கல்வியிலும் அபிவிருத்தி தென்படும்.

கன்னி: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலையும் தென்படும்.

துலாம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்குச் சோர்வைத் தரலாம். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருச்சிகம்: ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் மேலிடத்தின் செல்வாக்குப் பாதிக்கப்படலாம்.

தனுசு: போதுமென்றமனத்துடன் இருப்பீர்கள் முதியவர் ஒருவரின் அறிவுரைகள் உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டும். குடும்பத்திலும் அன்பு தவழும்.

மகரம்: ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும். உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

கும்பம்: அன்னைவழி ஆதரவு இன்று தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம் பொருள்வரவிற்கும் இடமுண்டு.

மீனம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த நாள். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சுகாதார நிலைய திறப்புவிழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்பசுகாதார கவனிப்பு குழுவினர் இப்பகுதி பொது மக்களின் நலன் கருதி நிறுவியுள்ள சங்கரத்தை சுகாதார நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

குழுத்தலைவர் டாக்டர் ரி. பகீரதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தின்பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. மகாலிங்கம் கலந்துகொண்டு சுகாதார நிலையத்தை திறந்துவைத்தார்.

சங்கரத்தை மாதர் சங்க செயலாளர் திருமதி. மங்களேஸ்வரி குலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

## மக்கள் தொண்டனை இழந்தோம்

(யாழ்ப்பாணம்)

''மக்களுக்கு ஆற்றும் சேவையை அரச உத்தியோகமாக மட்டும் கருதாது தனது பெருமைமிக்க தொண்டாக நினைத்து சேவை செய்தவர் அமரர் குணநாயகம். அன்னார் மறைந்து ஒரு திங்கள் மறைந்துவிட்டது ஆனல் அன்னார் ஆற்றிய பணிகள் என்றுமே நிலைத்துநிற்கும்''

இவ்வாறு வவனியா மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. கே சி. லோகேஸ்வரன் அனுப்பிய நினைவுதின அஞ்சலியில் அமரர் குணநாயகத்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிப்பதாவது: ''அமரர் குணநாயகம், வவனியா தமிழ்ப்பிரிவின் தலைசிறந்த உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினர் மக்களுக்கு ஆற்றும் சேவையை பெருமைமிக்க தொண்டாக நினைத்தவர். பொறுப்புடன் செயல்பட்டார். பல இனம் வாழும் அவரது பிரிவில் பாரபட்சமின்றி நடந்து கொண்டார் மக்கள் ஸ்தாபனங்களை ஊக்குவித்தும் பலர் அதிசயிக்கத்தக்கவண்ணம் அவற்றைத் நெறிப்படுத்திய இவர் நான்கண்ட ஈடுகொடுக்க முடியாத சிலவருள் ஒருவர். அவர் பூநகரி, சாவெட்டி, வேலணை ஆகிய இடங்களில் நிர்வாகசேவை உத்தியோகஸ்தராகக் கடமையாற்றியபோது பல அபிவிருத்தித்தட்டங்களில் பெரும் பங்காற்றியுள்ளார். அவ்விதமாக செயல்பட்ட ஒருவரை இழந்து நிற்கின்றோம்.'' (கெ)

## கொழும்புசென்ற இளைஞரைக் காணவில்லை

(பண்டத்தரிப்பு)

வெளிநாடுசெல்ல பாஸ்போட் எடுப்பதற்காக இம் மாதம் 12-ம் திகதி கொழும்புக்கு புறப்பட்டுச்சென்ற பண்டத்தரிப்பைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லையாம்.

கொழும்பிலுள்ள இவரது உறவினர்கள் பல இடங்களிலும் இவரைத்தேடியும் இதுவரை இவர் கண்டுபிடிக்கப் படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது. பண்டத்தரிப்பு அந்தோனியார் வீதியைச் சேர்ந்த பஞ்சலிங்கம் வாமதேவன் [30 வயது] என்பவரே இவ்வாறு காணமல் போனவராவார்

இவர் விண்ணப்பம் செய்திருந்த இவரது பாஸ்போட் சில நாட்களுக்கு முன்பு பதிவுத் தபாலில் இவரது வீட்டுக்கு வந்து சேர்ந்துள்ளதாம். ஆனல் இவர் இதுவரை வந்து சேராமை வீட்டாருக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவருக்கு நேர்ந்த கதி பற்றி அறிந்து தெரிவிக்குமாறு இவரது பெற்றோர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேரில்சென்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நினைவுச்சின்னம்

(கொழும்புத்துறை)

பிரபல சுதுமலை வைத்திய கலாநிதி அமரர் அண்ணாமலையின் நினைவாக நினைவுச் சின்னம் எழுப்பப்படவுள்ளது இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று இம் மாதம் 30ம் திகதி சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ள. வைத்திய கலாநிதி அண்ணாமலை மறைந்து 27 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்

# பனம்பொருள் கொள்வனவு விற்பனவு நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பனம்பொருள் கொள்வனவு நலன்கருதி இலங்கைப் பனை அபிவிருத்திச்சபையின் விற்பனவு நிலையம் ஒன்றை கிளிநொச்சியில் திறபது தொடர்பான ஆலோசனைகள் கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்றது.

இதுசம்பந்தமாக பனை அபிவிருத்திச்சபைஇயக்குனர்களில் ஒருவரான திரு எஸ் பாலசிங்கம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ் சண்முகராஜா, தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு எஸ் அமிர்தலிங்கம், அபிவிருத்திப் பிரிவு உதவிஅரசாங்க அதிபர் திரு. கே குணராசா, மேலதிக அரசாங்கஅதிபர் திரு கே முருகவேள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையின்பேரில் விரைவில் கிளிநொச்சி நகரில் பனை அபிவிருத்திச்சபையின் விற்பனவு நிலையம் திறந்து வைக்கப்படும் என நம்பப்படுகிறது.

இத்திட்டத்தை முழுமனதுடன் வரவேற்ற அரசாங்க அதிபர் இத்திட்டம் செயல்பட தனது முழு ஆதரவையும் தருவதாக ஆலோசனைக் கூட்டத்தின்போது உறுதிஅளித்தார். பனை அபிவிருத்திச்சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் கிளிநொச்சியில் மக்களுக்குப் பயன்படுத்தக்கவகையில் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் இதுதொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவருடனும் இயக்குனர்களுடனும் தொடர்புகொளவதாகவும் கிளிநொச்சியில் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய திரு. பாலசிங்கம் தெரிவித்தார்.

## நயினையில் குணநாயகம் வீதி

(வண்ணார்பண்ணை)

நீண்டகாலம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய நலன்களில் ஈடுபாடு கொண்டிருந்தவரும் தீவுப்பகுதிதெற்கு உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றி அண்மையில் வவனியா உதவி அரச அதிபராக இருந்த சமயம் அகால மரணமான திரு ஆ குணநாயகத்தின் நினைவாக நயினை அம்பாள் ஆலய முக்கிய தொடர்பு வீதி ஒன்றிற்கு 'ஆ குணநாயகம் வீதி' எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் அடியார்கள் பலர் கலந்துகொண்டனர். தீவுப்பகுதி தெற்கு உதவிஅரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் இந்த ஞாபகார்த்த வீதியை திறந்துவைத்தார்.

## யாழ். உதைபந்தாட்ட லீக்கின்

# உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு முன்னேடியாக லீக்கு 7—ஏ சையிட் போட்டியை லீக்குடன் இணைந்த கழகங்களுக்கிடையில் ஆரம்பிக்கவுள்ளது. இதனைத் தொடர்ந்து சுழல் கேடயத்துக்கான போட்டிகளும் இடம்பெறும். இப்போட்டிகளில் யாழ். உதைபந்தாட்ட லீக்குடன் நேரடியாக இணைந்த கழகங்கள் கட்டாயமாகப்பங்குபற்ற வேண்டுமெனவும் அவ்வாறு பங்குபற்றத்தவறும் கழகங்கள் மேற்கொண்டும் லீக்கால் நடத்தப்படும் எதுவித போட்டிகளிலும் பங்குபற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது என் தனை கடைசியாக நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து லீக்கில் அங்கத்துவம் பெறுத கழகங்களுக்கு தற்காலிக அங்கத்துவம்வழங்கப்பட்டுஅவர்களுக்கிடையிலும் 7—ஏ- சையிட் நொக்-அவுட் போட்டிகளை அவ்வப் பகுதி விளையாட்டு உத்தியோகத்தர்களைத் தலைவராகக் கொண்டு உப- குழுக்களை அமைத்து போட்டிகளை நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இம்மாதம் 30ம் திகதி கூட்டப்படும் போட்டிக் குழுவில் இறுதி முடிவுகளை மேற்கொள்ளுவதற்காக போட்டிக் குழுச் செயலாளர் ஏ. தேவராசாவிடம் சகல அதிகாரங்களையும் நிர்வாகசபை வழங்கி உள்ளது

இவ்வாறு யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார். (வி)

## ஸ்ரான்லி கல்லூரி புதிய அதிபர்



(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் ம. வி. தின் அதிபராக திரு மு. இராமலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் வைத்தீஸ்வரா வித்தியாலய பிரதி அதிபராகவும் புங்குடுதீவு ம வி, குருநாகல் இந்து தமிழ் ம வி ஆகியவற்றின் அதிபராகவும் குருநாகல், சிலாபம் மாவட்ட விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றிய இவர்விஞ்ஞான பட்டதாரியும் கல்வி டிப்ளோமா பட்டதாரியுமாவார் பிரபல சமய சமூக சேவையாளரான இவர்இலங்கை இளம் கலைஞர் மன்ற செயலாளருமாவார் இவர் இக்கல்லூரியின் பழைய மாணவரெனபது குறிப்பிடத்தக்கது

## கொழும்புத்துறையில் மடுமாதா விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் மடுமாதா தினத்தை முன்னிட்டு ஆடிமாதம் 1ம் திகதி மாலை 5 மணிக்கு திருப்பலியும் 2ம் திகதி காலை 6-30 மணிககு பாடற்திருப்பலிப் பூசையும் திருச்சுரூப பவனியும இடம் பெறும்.

## முதலாம் திகதி தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் 22-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்த திருவிழாக்கள் தொடர்ந்து பத்து நாட்கள் விபரிசையாக நடைபெற்றுவருகிறது. 1-ம் திகதி தேர்த்திருவிழா நடை பெறும். அடுத்த நாள் தீர்த்தத்திருவிழாவும் மறுநாள்பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

## ஆவணியில் யாழ் இலக்கியவட்ட பரிசளிப்புவிழா

(கொழும்புத்துறை)

யாழ். இலக்கியவட்டத்தின் அமைப்பான இலங்கை இலக்கியப் பேரவையினுல் நடாத்தப்படும் 1984ம் ஆண்டுவரை வெளிவந்த சிறந்த ஆக்க இலக்கிய நூலகளுக்கான அறிஞர் குழுவின் சிபார்சுகள் தொகுக்கப்பட்டு அவை யாழ். இலக்கியவட்டச் செயற்குழுத் தீர்மானத்தையடுத்துச் சான்றோர் குழுவினரிடம் தெரிவிற்காகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

யாழ். இலக்கியவட்டச் செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு. சசி பாரதி தலைமையில் நடைபெற்றது. யாழ் இலக்கிய வட்டத்தின் ஆண்டுக் கூட்டத்தையும், இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்புவிழாவையும்ஆவணிமாத இறுதியில் நடாத்துவதென்று பரிசளிப்பு விழாவைமுன்னிட்டு விசேடமலரை வெளியிடுவதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது

இவ்விழாவில் பத்திரிகைத் துறையில் பணியாற்றிய திரு. இராஜா, அரியரத்தினம், திரு அ செ முருகானந்தம் ஆகியோரைக் கௌரவிப்பதென்று தீர்மனிக்கப்பட்டுள்ளது

HOME FINACE LTD.
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்
பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக
சீத்தை – பப்ளின் – பிசாமா
போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விருப்பியோர் உடன் வந்து பார்வையிட்டுத் தெரிவுசெய்யவும்.
NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

அரசாங்க அறிவித்தல்
நீரிறைக்கும் இயந்திரங்களுக்கு திருத்த வேலைகள்
யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பெரும்பாகத்தின் கீழ் யாழ்ப்பாணம்; கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள வைத்திய நிறுவனங்களின் நீரிறைக்கும் இயந்திரங்கள், நீர்க்குழாய்கள் ஆகியவற்றில் பழுதேற்படும்போது திருத்துவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட திருத்த வேலையாளர்களைப் பதிந்து கொள்வதற்காக 1985ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன
விண்ணப்பதாரர்கள் மின்சாரத்திலும், மண்ணெய்யிலும் இயங்கக்கூடிய நீரிறைக்கும் இயந்திரங்களைத் திருத்தக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
க. மாணிக்கம்
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
சு. சே பி. ப. பணிமனை,
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். 4071

# "எங்களிடமிருந்து கடத்திய வாகனங்களைத் திருப்பி ஒப்படையுங்கள்"

## யாழ். பிரதேச மின்சார அலுவலகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மின்சார பராமரிப்பு வேலைகள் கிரமமானமுறையில் மேற்கொள்ளப்படாததினுல் மின்சார உபகரணங்கள் எந்த நேரத்திலும் பழுதடையும் அபாயம் உள்ளது:

இதனுல் நாம் மின்சார உபகரண பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது இதற்காக எங்களிடமிருந்து இளைஞர்களினுல் கடத்திச் செல்லப்பட்ட வாகனங்களை திரும்பித் தந்துதவுமாறு இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச அலுவலகம் மேற்படி வாகனங்களை கடத்தியவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த சிலகாலமாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொது மக்களுக்கு மின்சாரம் வழங்கி வந்துள்ளோம். வாகனங்கள் எதுவுமில்லாதநிலையில் தனியார் வாகனங்களின் உதவியுடனும், துவிச்சக்கர வண்டிகளிலும் பல மைல்கள் சென்று அத்தியாவசியமான திருத்த வேலைகளைமேற்கொண்டோம். சாதாரணமாக மின்சார உபகரணங்களை பல வருடங்கள் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் என்ற அடிப்படையில் பலவித பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போது யாழ்ப்பாணப் பகுதியில் இருக்கும் சகல மின்சார உபகரணங்களும் பலகாலமாக கிரமமான பராமரிப்பின்றி எந்தநேரத்திலும் பழுதடையக்கூடிய ஆபத்தில் உள்ளன. உதாரணமாக ஒரு மின்மாற்றி (ராண்ஸ்போமர்) தற்போது பழுதடைந்தால் அதற்குரிய மின்மாற்றி கொழும்பிலிருந்து வரும்வரை அப்பகுதி மக்கள் இருளிலேயே இருக்கவேண்டும். புதிய மின்மாற்றிகள் கொழும்பிலிருந்து உடனடியாகபெறமுடிவதில்லை எனவே எங்கள் மின்சார உபகரணங்களில் தேவையான பராமரிப்புவேலைகளை அடுத்த வாரத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இதனைத் திட்டமிட்டு செய்வதற்குப் பலவிதமான வாகன வசதிகள் வேண்டும். எங்களுக்குச் சொந்தமான பலவிதமான வாகனங்களை இளைஞர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். தற்சமயம் எங்கள் திருத்த வேலைகளுக்குப் பாவிப்பதற்கு உதவியாக அவற்றை எங்களிடம் திருப்பி ஒப்படைத்தால் எங்களால் யாழ் பகுதிக்கு மிகவும்சிறந்தசேவையையாற்றமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு அதேநேரத்தில் நாங்கள் மற்றைய மாவட்டங்களிலிருந்து அவசரமாக செயலாற்றுவதற்கென எடுத்துப் பாவிக்கும் வாகனங்களைப் பாவிப்பதற்கு எதுவித இடையூறும் ஏற்படாமல் இந்த இளைஞர்கள் உறுதுணையாய் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இளைஞர்கள் எங்களுடைய சேவையை மிகவும் அத்தியாவசியமான சேவையாகக் கணிக்கவேண்டும்

தற்பொழுது யாழ் மாவட்டத்தில் உத்தரவுபெருத மின்சார இணைப்புகள் கூடிக்கொண்டேபோகின்றது. இந்த நிலைமை நீடிப்பதனுல் பல மின்மாற்றிகள் கூடிய பாரத்தினுல் எரிந்துவிடும்நிலையில் இருக்கின்றன. நாங்கள் இந்த இணைப்புகளைத் துண்டித்து மின் மாற்றிகளைக் காப்பாற்றுவதற்கு இவர்கள் எங்களுக்கு பக்கஉதவியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். "நாங்கள் இருபகுதியினரும் கூட்டாக முயற்சி எடுத்தால்தான் எமது பகுதிக்கு வருங்காலத்தில் மின்சாரத்தை தடையின்றி கொடுக்கமுடியும். வெள்ளம் வருமுன்னமே அணைபோடாமல்விட்டால் நாங்கள் எல்லோருமே சேர்ந்து கவலையடையவேண்டிவரும். ஒத்துழைப்பும் எங்களுக்குக் கிட்டும்பட்சத்தில் எங்களுடைய சிறந்த சேவையை நீங்கள் எதிர்பார்க்கலாம். இலங்கை மின்சார சபையின் கொள்ளைகளைத் தடுக்கும்வண்ணம் பகிரங்க வேண்டுகோள் விடவேண்டும் என்று சகல இயக்கங்களையும் கேட்டுக்கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது".

# "மீண்டும் மோதலுக்கு வழிவகுக்க வேண்டாம்"

## பண்டிதர் இரத்தினம் கூறுகிருர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டும் பணியில் இப்பொழுது தீவிரமாக ஈடுபடாமலிருத்தலுடன் மூடப்பட்ட பொலிஸ்நிலையங்களைத் திறப்பதற்கும், பொலிஸ்ரோந்து சேவை புரிவதற்குமான எவ்வித முயற்சியையும் இப்பொழுது மேற்கொள்ளாது இருத்தல்வேண்டும் என்றும் அவ்வித முயற்சிகளை இப்பொழுது செய்ய முயன்ருல் மீண்டும் மோதலுண்டாகும்சூழ்நிலை உருவாகுமென்று ஊர்காவற்றுறை முன்னுள் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திரு கா பொ இரத்தினம் பத்திரிகைக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்கம் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை விரைவில் செயற்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள திரு. கா. பொ. இரத்தினம் இதுவரை இடம்பெற்றுள்ள பல்வகை அழிவுகள், கொடுமைகள், உயிர் இழப்புகளின் பின் தோன்றியுள்ள போர்நிறுத்த உடன்பாடுநிலைத்து, அரசியல் தீர்வினுல் தமிழர் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமானுல் அரசாங்கம் சில அடிப்படை உண்மைகளை ஏற்றுக்கொண்டு விரைவில் செயல்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த அடிப்படை உண்மைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் பல்லாண்டு காலமாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் இடித்துரைத்தபோதிலும் ஆட்சியாளர்கள் செவிசாய்க்காமல் கைக்கொண்ட அடக்குமுறைகளாலும் புறக்கணிப்புக்களாலும் பாதுகாப்பு படையினரின் வன்செயல்களாலுமே தமிழ் இளைஞர்கள் போராளிகளாகி ஆயுதம் ஏந்தினுர்கள்.

"ரஷ்யா, சீனு போன்ற நாடுகளில் சிறுபான்மையினங்களுக்கு வழங்கப்பட்டது போன்ற அரசியலமைப்புகளை தமிழினத்துக்கு வழங்காவிடினும் இந்திய மாநிலங்கள் பெற்றுள்ள முழு உரிமைகளையும் கொண்ட தன்னுதிக்கமுள்ள மாநில ஆட்சியினை நிலவுவதற்கு அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுப்பதன் மூலமே போர்நிறுத்தத்தை நிரந்தரப்போரொழிப்பு ஆக்கலாமென்றும் டில்லியில் திருமதி இந்திராகாந்தி அம்மையாருடன் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 'பேச்சுவார்த்தை' நடத்தி உருவாக்கிய பின்னிணைப்பு 'சி' இத்தகையதொரு மாநிலசபை அமைப்பையே அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(மா)

# "யாழ்ப்பாணத்திலும் மற்றும் பகுதியிலும் அமைதி நிலவும்"

## நூல் அன்பளிப்பு வைபவத்தில் டிக்ஸிற்

[கொழும்பு]

"பதட்டநிலையை தணிப்பதற்கான முயற்சி தொடர்ந்து நடக்கும். யாழ்ப்பாணத்திலும், மற்றும் இடங்களிலும் விரைவில் முழு அமைதி ஏற்படும்"

கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்தில் நடந்த நூல் அன்பளிப்பு வைபவத்தில் பேசிய இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு 3 லட்சம் ரூபா மதிப்புள்ள 28,000 புத்தகங்களை தமிழ்நாடுஅரசு வழங்கியுள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷன் அலுவலகத்தில் நடந்த வைபவத்தில், இந்திய ஹைகமிஷனர் திரு. டிக்ஸிற் இப் புத்தகங்களை நேற்றுமுன்தினம் வழங்கினுர்.

நூலகத்தின் சார்பில் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம் புத்தகங்களை பெற்றுக்கொண்டார்

தமிழ் இலக்கிய நூல்களிலிருந்து நவீன இலக்கியம், கலாச்சாரம்' இந்திய தத்துவம், இசை, பொருளாதாரம் வரை புத்தகங்கள் வழங்கப்பட்டன.

1981-ம் ஆண்டு மாவட்ட சபை தேர்தல் பிரசாரம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் ஏற்பட்ட வன்முறையின் போது இந்நூல் நிலையம் தீக்கிரையானது.

இவ் வைபவத்தில் பேசிய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம், பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியும் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமசசந்திரனும் காட்டும் ஆதரவுக்கு யாழ்ப்பாணமக்கள் நன்றி தெரிவிப்பதாகக் கூறினுர்.

தமிழ்நாடுஅரசு மகுதி நூல்களையும், விரைவில் வழங்குமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

(ஈ)

### கிளிவெட்டியில் பூசகரின் மனைவியும் மகளும் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை கிளிவெட்டி கிராமத்தில்அண்மையில்இடம்பெற்ற வன்செயல்களின்போது கொல்லப்பட்டவர்களில் கிளிவெட்டி அம்மன் கோவில் பூசகரின் மனைவி ருக்குமணி சிவசுப்பிரமணிய சர்மாவும் அவரது புதல்வி சுகந்தினியும் அடங்குவர்.

### உரும்பராய் கற்பகவிநாயகர் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஒடயம்பதி அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய ரதோற்சவம் வரும் திங்கட்கிழமை காலை நடைபெறுகிறது.

### இரதோற்சவம்

[புலோலி]

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகராலய இரதோற்சவம் எதிர்வரும் 1-ம் திகதி நடைபெறுகின்றது மறுநாளான செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும், மாலை கொடியிறக்கம் ஊஞ்சல் ஆசாரிய திருவிழாவும் புதன்கிழமை வைரவர் திருவிழாவும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

### கும்பாபிஷேகம்

வல்லிபுரம் குருக்கட்டுப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தின திருவிழா 30-ம் திகதியன்று நடைபெறவுள்ளது.

# வவனியா வழமைக்குத் திரும்புகிறது

(வவனியா)

அண்மையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தையடுத்து வவனியா நகரம் கலகலப்பாக காட்சியளிக்கின்றது.

நகரம் வழமைக்கு திரும்பியுள்ளது. கிராமிய மக்களும் நகருக்கு வர ஆரம்பித்து விட்டனர். கிராமப்புறங்களுக்கான மினி வான் சேவைகள் ஆரம்பித்துள்ளது. தனியாருடைய கார்கள் ஓடத் தொடங்கியுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கான மினி பஸ் சேவை ஆரம்பமாகியுள்ளது. மூடப்பட்டிருந்த வியாபாரநிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன ஒத்திவைக்கப்பட்ட அரச பொது வைபவங்கள், நிகழ்ச்சிகள் நடாத்த ஏற்பாடு செய்யப்படுவதாக அரச அதிகாரி ஒருவர் கூறினுர்.

வவனியா மாவட்ட பொது விளையாட்டுவிழா ஒன்றும் மிக விரைவில் இடம்பெறவுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் செய்துமுடிக்கப்பட்ட நெடுங்கேணி மின் விநியோக ஆரம்ப வைபவமும் அடுத்த சில வாரத்தில் இடம்பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றது.

வெளியூர்களில் இருந்து பெருவாரியான வியாபாரிகள் வவனியா நகருக்கு வருகின்றனர்.

# அஞ்சலி

[யாழ்பபாணம்]

சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபரின் மறைவுக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் தனது அஞ்சலியைச் செலுத்தியது. டாக்டர் ஜே. பி ஸி பிலிப் தலைமையில் சென்ற இவர்கள், அமரருக்கு மலர்வளையம் வைத்துத் தமது அஞ்சலியைச் செலுத்தினர். பெருந்திரளான பழைய மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.


## பேர்லின் பிரயாணம்

JULY 1, 5, 8. திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

யாழ்-கொழும்பு-பங்கொக் வரை

எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

லிப்ருஸ் லிமிட்டெட்,

R. G. பில்டிங், 70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளுயிட்

மலிவான விலைக்கு போதியளவு பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic BRAKE & CLUTCH FLUID

விநியோகஸ்தர்கள்:-
டிமோ இன்டஸ்றீஸ் லிமிடெட்
65, ஜேத்தவன வீதி,
கொழும்பு – 14.
தொலைபேசி: 23702-4, 34751




CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்

450 மிலி – ரூ. 27/25
250 மிலி – ரூ. 15/45

## மொடேர்ண் மினி சினிமா

(ஸ்ரீலங்காஅச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)

**Lady in Trouble**

தினசரி 3 காட்சிகள்

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## ஸ்ரான்லி மினி 'A'

10-30, 2-30

கமல் - ஊர்வசி கவுண்டமணி

**அந்தஒரு நிமிடம்**

## ஸ்ரான்லி மினி 'B'

10-30, 12-15, 2-15, 4-15

**"SLAVE"**

## தேவி மினி சினிமா

(வின்ஸர் அருகாமை)

29-6-85 தொடக்கம்

பிரபு - நளினி நம்பியார், தேங்காய்

**நியாயம்**

(தமிழ் - கலர்)

V. G. P. கொப்பி

(சிறந்த குடும்பச் சித்திரம்)

## S. T. L. மினிசினிமா

(திருநெல்வேலி)

காலை 10-30 காட்சி மட்டும்

மோகன் - ஊர்வசி

**தெய்வப்பிறவி**

காலை 9.00 மணி, 1-15, 2-30, 4-30

**Emmanuel-4**

(Adults)

## ராஜா தியேட்டர்

யாழ்ப்பாணம்

Daily 10-30, 2-30, 4-30 p m

**48 HOURS**

(color)

(Adults only)

விறுவிறுப்பூட்டும் சண்டைகள் நிறைந்த படம்

## வெலிங்டன்

10-30 — 2-15 — 4-15

PIRANHA II

**Flying Killers**

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## லிடோ சினிமா

10-30 — 2-30

பாண்டியன் — ரேவதி நடித்த

**'புதுமைப் பெண்'**

(ஈஸ்ட்மன் கலர்)

## நியூசாந்தி (மினி)

(யாழ். சாந்தி சினிமாவில்)

10-30, 12-30, 2-30, 4-30 P.M

Michael Samuel

George Harrel

in

**"The First Turn On"**

(Stricklly for Adults)

(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

## கங்கா மினி

நாச்சிமார் கோவிலடி

29th and 30th

Daily 2-30 and 4-45 P.M

Brucelee

**"Way of the Dragon"**

(கராட்டி சண்டைகள் நிறைந்த படம்)

## லதா மினி

(கோண்டாவில்)

10-30, 3-00, 5-45

சிவகுமார்-சுஜாதா, அம்பிகா நடித்த

**கற்பூரதீபம்**

## குமரன் மினி சினிமா

(67, ஸ்ரான்லி வீதி)

10-30, 12-30, 2-30, 4-30

**CALI GULA**

(Adults Only)

## பவித்ரா மினி

கஸ்தூரியார் வீதி

(யாழ் இந்துக் கல்லூரியடி)

10-30, 2-30, 4-30, 6-00

**Lady Chattaley's Lover**

கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## வின்ஸர்

வெண்திரையில்

தினசரி 10-30, 2-30

**GANTHI**

**காந்தி அடிகள்**

மகாத்மாகாந்தி அடிகளின் உண்மையான வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியம், பல கோடி டாலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு. முதன்முறையாக யாழ்நகரில் காண்பிக்கப்படும் புதிய வெளியீடு.

## உஷா மினி

(கே. கே. எஸ் வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கும், கடைப்பிள்ளையார் கோவிலுக்கும் மத்தியில்)

தினசரி 10-30, 2-00, 4-30

BRUCE LI ... in

**FIST OF FURY III**

பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட கராட்டி சண்டைப் படம்

## சீட்டிழுப்பு முடிவுகள்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய தொண்டர் சபையினரால் நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டு முடிவுகள்.

| பரிசு இல. | சீட்டிலக்கம் | பரிசு இல. | சீட்டிலக்கம் |
|---|---|---|---|
| 1. | 8040 | 2. | 2247 |
| 3. | 4064 | 4. | 897 |
| 5. | 2291 | 6. | 5151 |
| 7. | 3027 | 8. | 2367 |
| 9. | 3850 | 10. | [illegible] |
| 11. | 4678 | 12. | 4251 |
| 13. | 535 | 14. | 3560 |
| 15. | 5630 | | |

இங்ஙனம்

அம்பாள் தொண்டர் சபை,

4105

## நிர்வாக மாற்றம்

யாழ்ப்பாணம் இலக்கம் 300 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள எஸ். ஆர் எஸ் ரெக்ஸ்ரைல்ஸ் என்னும் விலாசங்கொண்ட புதிய பங்கீட்டு வியபாரத்தின் பொறுப்பதிகாரியாகிய செல்வி சா சிவகாமி ஆகிய நான் அறியப்படுத்துவது ஆவது; குறித்த வியாபாரத்தின் முன்னுள் சொந்தக்காரர் ஆன செல்லத்துரை தேவபாலன் கொண்டிருந்த கொடுப்பனவுக் கடன்களுக்கும் புதிய ஸ்தாபனத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும், அந்த ஸ்தாபனத்தின் கொடுக்கல் வாங்கலுக்குப் புதிய ஸ்தாபனம் பொறுப்பாக இருக்கமாட்டாது என்றும் வெளியரங்கப்படுத்துகிறேன்.

இங்ஙனம்

சா. சிவகாமி

4098

## இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி

10-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட பயிற்சிகளாக நடைபெறவுள்ளன

★ மோட்டார் மெக்கானிஷம் ★ வெல்டிங்
★ எலக்றிக்கல் வயறிங் ★ டிராவ்மென்சிப்
★ ஓட்டோ வயறிங் ★ றேடியோ, ரி வி

முதல்தர சித்தி பெறுபவருக்கு பயிற்சிப்பணம் திரும்ப வழங்கப்படும்

பயிற்சி யாழ். நிலையத்தில் பகல் நேரத்திலும், இணுவில் கிளையில் காலையிலும், மாலையிலும் நடைபெறும்.

**ஆரம்ப திகதி: 03- 07- 85**

விபரங்கட்கு:

11, B மொம்சாக் கட்டிடம்,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

4026

## தேங்காய் எண்ணெய் விற்பனைக்குண்டு

எம்மிடம் சுத்தமான, தரமான தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பிண்ணாக்கு எந்த நேரமும் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்ரீ கிருஷ்ணா இன்டஸ்றீஸ்,**

7, 8, கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி.

தொலைபேசி: 226 (4076)

## மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

### உயர்தர வகுப்பு-மதிய விருந்து

இன்று (29-06-85) சனிக்கிழமை நடைபெறவிருந்த வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டுள்ளது, சிரமத்துக்கு மன்னிக்கவும்.

—அதிபர்

4111

## ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி

மற்றும் நாடுகளுக்கு

### பயணம் செய்யவேண்டுமா?

(1) பிரயாணத்துக்கான ஆலோசனைகளும் பயண ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்
(2) யாழ்நகரில் இருந்து Berlin வரை எமது பிரதிநிதி கூட்டிச் செல்வார்.
(3) பாஸ்போட், பொண்ட் மற்றும் பயணத்துக்கான சகல ஒழுங்குகளும்.
(4) கொழும்பில் பாதுகாப்பான தங்குமிடவசதி.

தொடர்பு:

S. வரன், நீங்குவில், துன்னாலை தெற்கு, கரவெட்டி.

S. நேசன், 127, பாங்சல் வீதி, யாழ்ப்பாணம். (யாழ். மரியா கோட்டலுக்கு அண்மையில் உள்ளது)

(4095)




## மில்க்வைற் செய்தி – இதழ் 115

இராசராசன் சிறப்பு மலர் புத்தம் புதிய படங்கள் சகிதம், அநேக தகவல்களை உள்ளடக்கி, அதிக பக்கங்களில் 1-7-85இல் வெளியாகிறது. விரும்புவோர் மில்க்வைற் நீலக்கட்டி மேலுறை 10, சுப்ப மில்க்வைற் உறை 02, பார்கட்டி உறை 02 அல்லது சலவைபவுடர் வெற்றுப் பெரிய பெட்டி 01 அனுப்பியோ, நேரில் தந்தோ பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், த பெ. 77, யாழ்ப்பாணம்.

## ஏல விற்பனை

ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9-00 மணி முதல் 12-00 மணிவரை பாவிக்கப்பட்ட

★ துண்டுக் கம்பிகள்,
★ முறுக்குக் கம்பிகள்,
"ஆங்கில் அயண்" எச் ஐ வடிவ
★ உருக்குத் தீராந்திகள்

என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் ஒவ்வோர் சனிக்கிழமையும் தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3ம் கூற்று முடிவடைந்த உடன் முழுத் தொகையின் 1/3 பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும். பொருட்கள் விற்கப்பட்ட திகதியில் இருந்து 48 மணி நேரத்தில் விற்கப்பட்ட பொருட்கள் எங்கள் தொழிற்சாலை வளவில் இருந்து அகற்றப்படவேண்டும்.

பொது முகாமையாளர்.
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**

காங்கேசன்துறை.

1985-06-25. 4058

# பண்டிதமணியின் இரு நூல்கள் நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 'அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி கலாமன்றத்தில் யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பண்டிதமணியின் 87-வது பிறந்தின உரையை க. உமாமகேஸ்வரன் நிகழ்த்துவார்.

''அன்பினைந்திணை'' நூல் வெளியீட்டுரையை பண்டிதை பொன். பாக்கியமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக் கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையும் நிகழ்த்த இந்நூலின் முதற்பிரதியைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பெற்றுக் கொள்வார்.

''அத்வைத சிந்தனை'' நூல் வெளியீட்டுரையை திரு த. இராசேந்திரமும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களும் நிகழ்த்த, நூலின் முதற் பிரதியைப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுக்கொள்வார்.

மூதறிஞர், பண்டிதமணி சமூகமளிக்கவுள்ள இவ்விழாவில் நன்றியுரையை நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் நிகழ்த்துவார். (அ)

## யாராய்..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்பையும் வலியுறுத்தியிருந்தது.

திரு. ஆனந்தராஜன் இந்நிகழ்ச்சியை ஒழுங்குசெய்ததற்காகவும், கலந்துகொண்டமைக்காகவும் மட்டும் அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தால் இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது பேசித் தீர்க்கப்படக்கூடிய விடயமேயொழிய மரணதண்டனைக்குரிய விடயமல்லவெனத் தமிழீழ மாணவர் பேரவை [தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்] கருதுகின்றது.

மேற்படி மரணதண்டனை வழங்கப்படுவதற்கு வேறு காரணங்கள் இருப்பின் அவற்றை மக்கள்முன் வெளிக்கொணர்வதுடன் இம் மரணதண்டனையுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக உரிமைகோர வேண்டுமெனத் தமிழீழ மாணவர் பேரவை [தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்] கேட்டுக் கொள்கின்றது. வேறு காரணங்களின்றி விளையாட்டு நிகழ்ச்சிக்காக மட்டும் இத் தண்டனை வழங்கப்பட்டிருப்பின் இது தமிழீழ ஆசிரியர்களையும், மாணவர்களையும் உதாசீனப் படுத்துவதாக அமைந்துள்ளதென நாம் கருதுவதுடன் இச்செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

## யாழ். பிரதேச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு மின் விசிறிகள், ஒரு சுவர்க்கடிகாரம், டெலிபோன் ஸ்விட்ச் தட்டு, தட்டச்சு கருவிகள் என்பனவற்றுடன் இந்த அலுவலகத்தின் களஞ்சிய அறையிலிருந்த யாழ். மாவட்ட வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவிருந்த பல பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

இக்கொள்ளைக் கோஷ்டியினர் நேற்று முன் தினம் மாலையிலும் இந்த அலுவலகத்தில் கொள்ளை முயற்சியொன்றில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (கி)

## பொலிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது ஒட்டுசுட்டானில் வைத்து ஒருவர் காணாமல்போனதாகவும் மற்றவர் தப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது. தப்பிய மற்றவர் கான்ஸ்டபிள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குசென்று முறைப்பாடு செய்துள்ளார்.


# மரண அறிவித்தல்

## பொ. வாலாம்பிகை

(கற்கண்டு)

நீராவியடி கல்லூரி வீதியைச் சேர்ந்த பொன்னையா (சாமியார்) அவர்களின் மனைவி வாலாம்பிகை (கற்கண்டு) 28-6-85 காலமானார் இறுதிச்சடங்கு 29-6-85 இன்று காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மோகனதாசன்.

(4115)



# மரண அறிவித்தல்

## திரு. க. கனகரத்தினம்

மலாயன் பென்சனியர்

கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் திரு க. கனகரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவர் ஆவர்.

ஈமச்சடங்குகள் 29-06-85 (இன்று) சனிக்கிழமை காலை 10 மணியளவில் பிரம்படியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த திருநாவுக்கரசு.

[4106]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்கோவில் மேற்கு வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389-24126.

## ஆனந்தராஜன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியுடன் செயல்படுத்தி வருகின்றோம். சமுதாயத்தின் மேல்மட்டத்திலுள்ள துரோகிகள் தம் ஆளுமையாலும், ஆற்றலாலும், சமுதாய அந்தஸ்தாலும், பணச் செருக்கினாலும் செய்யும் துரோகத்தனங்கள் மூடிமறைக்கப்படுகின்றன. இவர்கள் தமிழினத்துக்கு செய்த துரோகங்களை இவர்களின் ஆதரவு சக்திகள் மனரீதியாக அறியாதிருக்கலாம் ஆனால் தமிழ் பேசும் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

இன்று இராணுவ முகாம்களில் எமது சகோதரிகள் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். எம் இளைஞர்கள் கண், காது இழந்து துடித்துக்கொண்டிருக்கின்றனர். வல்வெட்டித் துறையில் தமிழ் இளைஞர்கள் கட்டிடத்தில் வைத்துக் கொல்லப்பட்டனர். நெடுந்தீவுக் கடலில் 50க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர், இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர் இன்னமும் காயவில்லை இந்த நிலையில் சிங்கள இராணுவத்தினருடன் சிநேகபூர்வ கால் பந்தாட்டத்துக்கு இவர் ஒழுங்கு செய்தார்.

இதுசம்பந்தமாக எல்லா இயக்கப் போராளிகளும் இவரை அணுகி இவ்வாறு செய்ய வேண்டாமென்று கூறியபோது இயக்கங்களில் உள்ளவர்கள் ஒழுங்கான குடும்பங்களை சேராதவர்கள் என்றும் அதனால் தாம் அதனை ஏற்க முடியாது என்றும் கூறியுள்ளார். தொடர்ந்தும் இராணுவத்தினருடன் இத்தகைய போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார். இவ்வாறு நடந்த விளையாட்டின் போது எடுக்கப்பட்ட வீடியோ கசெற் சிறிலங்கா இராணுவம் தமிழர்களுடன் அன்பாக நடந்துகொண்டிருக்கிறது என்பதனை சர்வதேச அரங்கில் காட்டிக்கொண்டிருக்கிறது.

இவரது மறைவுக்கு இலங்கை வானொலி காட்டிய புகழாரம் எந்தளவுக்கு இவர் அரசாங்கத்துக்கும் இராணுவத்தினருக்கும் நல்ல பிள்ளையாக இருந்திருக்கிறார் என்பதனைக் காட்டுகிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜுபிலி–

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லூரி வளவில் உள்ள அவரது இல்லத்திலிருந்து அன்னாரின் பூதவுடல் நாளை காலை 8 மணிக்கு கல்லூரி ஜுபிலி மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நண்பகல் 1-30 மணிவரை பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பிற்பகல் 2 மணி முதல் 3-30 மணிவரை ஆராதனை இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து உறவினர்கள் இறுதி அஞ்சலி செலுத்துவார்கள்

பிற்பகல் 4 மணிக்கு ஜுபிலி மண்டபத்திலிருந்து பூதவுடல் தாங்கிய பேழையை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஊர்வலமாகச் சென். ஜோன்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்வார்கள். பிற்பகல் 5 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும். (க)

## மறைந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்பக்கத்தில்மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன கால்பக்கத்தில் மலர் வளையங்கள் வைக்கப்பட்டிருந்தன. கல்லூரியின் உயர் வகுப்புமாணவர்களாலும், மற்றும் அனுதாபிகளினாலும் இம் மலர் வளையங்கள் வைக்கப்பட்டிருந்தன

விளையாட்டுமைதானத்தைச் சுற்றி தோரணங்களும் கறுப்புக்கொடிகளும் காணப்பட்டன

சந்திகள் தெருக்கள், கல்லூரி சூழலிலுள்ள எல்லாப் பகுதிகளிலும கறுப்புக் கொடிகள் பறந்தன. வீதியோரங்களில் வாழை மரங்கள் கட்டப்பட்டு தோரணங்கள் போடப்பட்டிருந்தன

யாழ் சென் ஜோன்ஸ் மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பினரும் தனித்தனியே அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தனர்.

மாணவர்கள் சந்தியில்நின்று வரும் வாகனங்களை மறித்து அதன் மீது அப்பிரசுரங்களை ஒட்டிக்கொண்டிருந்தனர்.

யாழ். நகரிலுள்ள மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவ மாணவிகளும் நேற்றுக்காலை வந்து அஞ்சலி செலுத்தினார்கள்

மண்டபத்திற்குள் கியூவில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள் சிலர் கண்ணீர் விட்டுக் கதறியழுதார்கள்; சில மாணவர்கள் துக்க மேலீட்டினால் மயக்கமடைந்தார்கள்.

கல்லூரிக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

யாழ் நகர் சுவர்களிலும், அஞ்சலி தெரிவிக்கும் துண்டுபிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அதிபர் ஆனந்தராஜனின் இறுதிச் சடங்குகள் நாளை நடைபெறவிருக்கின்றன வெளிநாட்டிலுள்ள 3 பிள்ளைகள் புறப்பட்டு விட்டார்கள் என்றும், இன்று அதிகாலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொரு மகன் நேற்றுக்காலை புறப்பட்டிருப்பதாகவும், அவர் வந்து சேரத் தாமதமாகலாம் என்றும்கூறப்படுகிறது.

## அதிபர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது

அச்செய்தியில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பரி. யோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜன் அகால மரணம் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தனது அதிர்ச்சியையும், ஆழ்ந்த சோகத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றது. ஈழத்துத் தமிழ் பிரதேசங்களின் முக்கியமான கல்லூரிகளில் ஒன்றின் அதிபராக விளங்கிய அவர், முக்கியமான கல்விமான்களில் ஒருவராகவும் தலைசிறந்த கல்வி நிர்வாகியாகவும் விளங்கினார். எமது பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் உறுப்பினராகவும் விளங்கினார்.

அதிபர் ஆனந்தராஜன் ஆற்றிய பணிகள் மிகப்பெரியவை. என்றும் நினைக்கப்படவேண்டியவை. அவரது குடும்பத்தினரின் துயரில் யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் பங்கு கொள்கின்றது. (க)

## பூட்டான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிடையே ஏதாவது சிக்கல்கள் ஏற்படுமாயின் அவர்களுக்கு உதவவே இக்குழு அங்கு இருக்கும்.

பேச்சுவார்த்தைகளுக்கு அந்தரங்கத்தன்மையை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும், தேவையற்ற சக்திகள் அந்த இடத்துக்குள் செல்வதினைத் தடுக்கும் முகமாகவுமே பேச்சுவார்த்தைகளுக்குப் பூட்டான் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இப்பேச்சுக்கள் முன்னர் மாலைதீவில்நடைபெறும்என்று இருந்தபோதும் பாதுகாப்புக் காரணங்களினாலேயே தற்போது பூட்டானில் இதுநடைபெறவுள்ளது.

இலங்கையில் வடக்கும் கிழக்கும் ஒன்றாக இணைக்கப்பட்ட தமிழ் பிரதேச அமைப்புமுறை சம்பந்தமான ஆலோசனைகள் பூட்டான் மாநாட்டில் முன்வைக்கப்படுமாயின் இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. ஆர். சம்பந்தன் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று இந்திய மத்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த விரைவில் செல்லவுள்ளது.

## யாழ். பிரஜைகள் குழு அனுதாபம்

யாழ். பிரஜைகள் குழுவின் அவசரக்கூட்டத்தில் அதிபர் ஆனந்தராஜாவின் மறைவுக்கு தெரிவிக்கப்பட்ட அனுதாபச் செய்தியில் 'யாழ் பிரஜைகள் குழுவின் ஒருமுக்கிய உறுப்பினரான ஆனந்தராஜனின் திடீர் மரணச்செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளோம். ஒரு சிறந்த கல்விமானும் சமூக சேவையாளனுமாகிய இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது மாணவர்கள் நலனுக்காக மிக அக்கறையுடன் செயலாற்றிய இவர் தமிழரின் கல்வி தடையின்றி தொடர அரும்பணி புரிந்தார் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

யாழ். வை எம் சி. ஏயும் இவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளது.


# பரிசளிப்பு விழா

## நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை

29-6-85 சனிக்கிழமை நடைபெறவிருந்த
கட்டிடத் திறப்பு, பரிசளிப்பு விழா
1-7-85 திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

அதிபர்.

கைதடி. (4114)



# நூல் வெளியீட்டு விழா

இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய

★ அன்பினைந்திணை
★ அத்வைத சிந்தனை

நூல்களின் வெளியீட்டுவிழா
நாளை 30-6-85 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9 மணியளவில்
திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள
கலாமன்ற மண்டபத்தில் இடம்பெறும்.
அன்பர்கள், அபிமானிகள் பழைய மாணவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(4112)